**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S. 02/2023**

**CNR.No.TNCB19000**

| **Deposition** | : | **DW.4** |
|---|---|---|
| Name | : | பவித்ரா |
| Father's / Husband's Name | : | பொன்னுச்சாமி |
| Village / முகவரி | : | திம்மனூர் |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Age / வயது | : | 36 |

The witness swearned under Oaths Act 1969 on this the day of 08th October 2025

**முதல் விசாரணை**

நான் திம்மனூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் பிரதிவாதி தரப்பு 4 ஆம் சாட்சி ஆவேன். வழக்கின் சங்கதிகள் அனைத்தும் தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

.**பிரதிவாதி தரப்பு சானறாவணங்கள்**

| **வ. எண்.** | **தேதி** | **ஆவண விபரம்** | **ஆவணத்தின் தன்மை** | **ஆவண வரிசை** |
|---|---|---|---|---|
| 1 | | எனது ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் | பி.வா.சா.ஆ.4 |

**குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும், முதல் விசாரணை வாக்குமூலத்தின் 2 வது பக்கத்தில் 3 வது பத்தியில் எனது தந்தைக்கும் அவரது சகோதரருக்கும் பாகசாசனத்தில் ஒதுக்கப்ப்ட்ட சொத்தில் இருந்து ஒவ்வொருவரும் 50 செண்ட்

பூமியினை எனது தந்தையின் தாய், தந்தையாருக்கு ஆயுட்காலம் வரை அனுபவத்திற்கு மட்டும் அனுபவித்து கொள்ள மேற்படி பாகசாசன பத்திரத்தில் எழுதபட்டிருந்தது அவர்கள் ஆயுட்காலம் பின் ஷை 50 செண்ட் அவர் அவர் சொத்தை அவர் அவர் அடைந்து கொள்ளும்படி எழுதப்பட்டிருந்தது என்று சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். மேலே சொல்லப்பட்ட சொத்து க.ச.எண்.805/ 6 காலைக்கு சம்பந்தப்பட்டது என்றால் சரிதான்.

பாகபத்திரத்தை படித்து பார்த்திருக்கிறேன், முதல் விசாரணை வாக்குமூலத்தில் 3 வது பக்கத்தில் 5 வது பத்தியில் க.ச.எண்.805/ 6 காலையில் 4.03 ஏக்கர் பூமியை எழுத தவறிவிட்டதாக கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 50 செண்ட் தவறி இருப்பதாக சொல்லியிருக்கிறேன். 5 வது பத்தியில் சொல்லியிருப்பது சரியா தவறா என்றால் தவறு. காலை எண் 805/6 ல் 4 ஏக்கர் 53 செண்ட் விஸ்தீரனம் உள்ள பூமியை நஞ்க்குட்டி சுவாதீனத்தில் இருந்தது என்பதற்கு ஆவண சாட்சியம் இல்லை என்றால் சரியல்ல. நஞ்சுக்குட்டியின் பெயரில் அடங்கல் உள்ளது.

வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆகிய ஆவணங்கள் அடங்கல் என்றால் சரிதான், நஞ்சுக்குட்டியின் தந்தை மாரன், மாரன் பெயரில் தான் அடங்கல் உள்ளது என்றால் 2023 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட அடங்கல் அவரது பெயரில் உள்ளது தற்போது நஞ்சுக்குட்டியின் வாரிசுகளான லட்சுமி வகையறா பெயரில் உள்ளது. அந்த அடங்கலுக்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நஞ்சுக்குட்டி அவரது வாரிசுகளுக்கு செட்டில் மெண்ட் செய்யப்பட்டதன் பேரில் தான் அவரது வாரிசுகளின் பெயரில் அடங்கல் உள்ளது என்றால் சரிதான்.

நஞ்சுக்குட்டியின் வாரிசுதாரர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. க.ச.எண்,805 / 6 ல் உள்ள பூமியை பாக கரார் செய்யவில்லை என்றும் தற்போதும் பொதுவாகத்தான் இருக்கிறது என்றும் அதனால் மாரனின் அனைத்து வாரிசுதாரர்களுக்கும் பங்கு உண்டு என்றால் சரியல்ல. எங்களுக்கும் அந்த பூமிக்கும் சம்பந்தம் இல்லை.

## மறுவிசாரணை

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.10.08 19:43:28 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.